முதன்மை சார்பு நீதிமன்றம், விழுப்புரம்
OS. No.10/2007

Witness-DW-7

பெயர் / தமிழ்மாறன்

**த.பெ - சின்னராசு**

**இன்று** (06.11.2025) **சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.**

சத்தியமாகச் சொல்கிறேன்

3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எனது திருமணத்தின் போது எனது தந்தையார் உயிருடன் இல்லை என்றால் சரிதான், எனது மூத்த அண்ணன் பெரியண்ணன் என்பவர் தான் முன் நின்று எனக்கு திருமணம் செய்து வைததார் என்றால் சரிதான், திருமணத்திற்கான செலவுகள் அவர் தான் பார்த்தார் என்றால் பொதுக்குடும்ப வருவாயிலிருந்து தான் செய்தார், திருமணத்திறகு முன்பாக நிச்சயதார்த்தம் நடந்தது என்றால் சரிதான், நிச்சயத்தின் போது எனது மனைவிக்கு எனதுவீட்டு சார்பில் 10 பவுன் காசுமாலை கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல, பெரியண்ணன் தான் கடன் வாங்கி காசு மாலை வாங்கி கொடுத்தார் என்றால் சரியல்ல, வெளிநபர்களிடம் இருந்து கடன் வாங்கிதான் எனது அண்ணன் எனது திருமணத்தை நடத்தினார் என்றால் சரியல்ல, சி அட்டவணைச் சொத்தான டிராக்டர் மற்றும் டிரைய்லர்கள் 2 எண்ணிக்கை எனது அண்ணன் பெரியண்ணன் மாமனார் வாங்கிக்கொடுத்தது அதனால் அது பெரிய்ண்ணனுக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல, எனது தந்தையார் பெயரில் தான் கடனாக வாங்கப்பட்டது, அந்த டிராய்லெரில் ஒரு டிரெய்லர் என்னுடைய கட்டுப்பாட்டில் தான் உள்ளது என்றால் சரிதான், அது பய்ன்படுத்தும் நிலையில் உள்ளதா என்றால் பழுது பார்த்தால் ஓடும், டிராக்டர் மற்றும் மற்றொரு டிரெய்லர் ஓடாத நிலையில் தான் உள்ளது என்றால் சரியல்ல, டிராக்டர் மற்றும் மற்றொரு டிரெய்லர் மிகவும் பழுதடைந்துவிட்டதால் அதை பயன்படுத்த முடியாது என்றால் இரும்பு எடைக்கு அதை விற்றுவிட்டார் என்றால்சரியல்ல நல்ல நிலையில் தான் இருந்தது அதனை யாருக்கும் தெரியாமல் வீற்றுவிட்டார், டிராக்டர் மற்றும் ஒரு ட்ரெய்லர் பெரியண்ணனின் மாமனார் வாங்கி கொடுத்ததால் அவர் வசமும்இ மற்றொரு ட்ரெய்லர் என் வசமும் இருந்தது என்றால் சரியல்ல, வழககு அயிட்டம் 42இ 43இ 44 பெரியண்ணன் பெயரில் உள்ள சொத்து என்றால் சரிதான், சாட்சி பின்னிட்டு அது பொதுக்குடும்பச் சொத்து பெரியண்ணன் பெயரில் வாங்கப்பட்டது என்று சொல்கிறார், வழககு அயிட்டம் 42இ 43இ 44 ஆகிய சொத்துக்களை பெரியண்ணன் அவரது 2வது மகள் திருமணத்திற்காக விற்பனை செய்ய முயற்சித்தார் என்றால் சரிதான், அதை விற்க தடை செய்ய வேண்டுமென வாதி செய்தித் தாளில் அறிவிப்பு கொடுத்திருந்தார் என்றால் சரிதான், அதனால் சொத்தை வாங்க வந்த ராமு என்பவர் அனைத்து வாரிசுகளும் கையெழுத்திட்டால் தான் சொ்தை வாங்கமுடியும் என்று சொல்லிவிட்டார் என்றால் அவ்வாறு சொல்லவிலலை,

திருமணம் நடைபெறுவதற்கு சொத்து விற்க வேண்டியது அவசியம் என்பதால் பெரியண்ணன் அனைத்து வாதி மற்றும் சகோதரிகளிடம் கையொப்பம் பெற்றார் என்றால் சரியல்ல, எனது தந்தையார் நோய்வாய்ப்பட்டு இருந்ததால் அவடைய வைத்திய செலவுக்காக சில சொத்துக்கள் விற்கப்பட்டது என்றால் சரிதான், இந்த வழக்கு தாக்கல் செய்தவுடன் எங்களுக்கு அழைப்பாணை வந்தது என்றால் சரிதான், அழைப்பாணை வந்தவுடன் எங்களது உறவினராக கருணாநிதி என்பவர் விழுப்புரத்தில் உள்ள வழக்கறிஞர் திரு,கருணாகரன் என்பவரிடம் அழைத்துச் சென்றார் என்றால் சரிதான், அந்த வழக்கறிஞர் தான் எனக்கு முதலில் என் சார்பாக ஆஜரானார் என்றால் சரிதான் எனது அண்ணன் பெரியண்ணன் எங்கள் இருவருக்காகவும் வழக்கு நடத்த சொன்னதன் பேரில் அந்த வழக்கு நடத்த கையெழுத்து போட்டு கொடுத்தேன், அந்த வழக்கில் எங்களது தரப்பு எதிர்வழக்குரை ஆட்சேபணையை தயார் செய்து எங்களிடம் காட்டி கையெழுத்து வாங்கினார் என்றால் சரிதான், ஆட்சேபணையை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை எனது அண்ணன் வழக்கு நடத்துவதாக சொன்னதால் அவரிடமே பொறுப்பை விட்டுவிட்டேன், வழக்கறிஞர் தயார் செய்த எதிர்வழக்குரையை நான் ஏற்றுக்கொள்ளாமல் வந்துவிட்டதால் தான் எனது அண்ணன் தனியாக வழக்கு நடத்தினார் என்றால் சரியல்ல, என் சார்பாக வழக்கை நடத்துவதாக எனது அண்ணன் சொன்னார் என்றும் அதனால் அவர் விருப்பப்படி விட்டுவிட்டேன் என்று பொய்யாக சொல்கிறேன் நான் தான் விருப்பப்பட்டு தனி வழக்கறிஞர் நியமித்துக்கொண்டேன் என்றால் சரியல்ல, பெரியண்ணன் பெயரிலுள்ள சொத்துக்களை அவர் தனிப்படட முறையில் வாங்கிய சொத்து என்பதால் தனிப்பட்ட முறையில் அனுபவிக்கிறார் என்றும்இ மீதமுள்ள சொத்துக்களை வாய்மொழியாக பிரித்து அனுபவிக்கிறார் என்றால் சரியல்ல, சர்வே எண்,217.8இ 9பி இ 10ஏஇ 10பி ஆகிவைகள் பெரியண்ணனின் தனிப்பட்ட சொத்து என்பதால் தான் வாதிகள் அதனை வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல அது பொதுக்குடும்பச் சொத்து தான், வாதியுடன் சேர்ந்து கொண்டு பொய்யான எதிர்வாதம் செய்கிறேன் வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல,

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.
Sd/-A.Tamilselvan,M.L.,
Principal Subordinate Judge ,
Villupuram